4th March 1958]

நிலம், இரண்டரை ஏக்கர் நஞ்சை நிலம் கொடுத்தால் சௌகரியமாக இருக்கும் என்ற அபிப்பிராயம் ரிஜிஸ்திரார் அவர்களால் சொல்லப்பட்டது. அதை ரெவினியூ போர்டாருக்கு அனுப்பி, அவர்களுடைய அபிப்பிராயம் என்ன என்று பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள்.

SRI S. NAGARAJA MONIGAR : ஹரிஜனங்களுக்கு என்று ஒரு காலனி தனியாக ஏற்படுத்துவதாக அமைச்சர் அவர்கள் சொன்னதிலிருந்து தெரிகிறது. அங்கு உள்ளவர்கள் ஹரிஜனங்களாகையால் அந்தப் பெயர் கொடுக்கப்பட்டதா ? ஏன் இப்படி ஹரிஜனங்களுக்குத் தனிக் காலனி ஏற்படுத்தப்படுகிறது அல்லது அந்தப் பெயர் ஏன் கொடுக்கப் பட்டது என்று அறிய விரும்புகிறேன். 1.40 p.m.

THE HON. SRI R. VENKATARAMAN : இரண்டு சொஸைடிகள் பண்ணுவதாக உத்தேசம். ஒன்று ஹரிஜனங்களுக்கு. மற்றது நிலம் இல்லாத ஏழைகளுக்கு. ஹரிஜனங்களுக்கு ஏன் கொடுக்கப்படுகிறதென்றால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்ற காரணத்தினால்தான்.

Government Hospital, Nagercoil

* 195 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have received any representation, dated 9th September 1957, from the Nagercoil Town Committee of the Communist Party regarding the improvement of the Government Hospital at Nagercoil; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) It was transferred to the Director of Medical Services for consideration and submission of necessary proposals. The proposals are awaited.

SRI V. K. KOTHANDARAMAN : கன்னியாக்குமரி தனியாகப் பிரிந்த பிறகு நாகர்கோயிலில் இருக்கிற மருத்துவ நிலயத்தை ஒரு மாவட்ட மருத்துவ மனையாக ஆக்குவதற்கு இதுவரையில் முயற்சி செய்யப் படவில்லை. ஆகவே இந்த ஆண்டிலாவது அதுபோல் செய்வதற்குச் சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : நான் அதைத்தான் சொன்னேன். அதற்குவேண்டிய சிபார்சுகள் இன்னும் வரவில்லை. அதற்கு வேண்டிய அதிகப்படியான வசதிகள் செய்ய வேண்டியது அவசியம்.

Co-operative Society near Kalrayan Hills

* 196 *Q.*—SRI M. P. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to start a Co-operative Marketing Society at the foot of the Kalrayan Hills in Attur taluk, Salem district, for marketing the products from the hills and for the benefit of the Hill Tribes there?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.